**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**S.C.No. 86 of 2023**

**Deposition of witness for PW-5**

பெயர் : பிரகாஷ் **27.07.2026**

தந்தை பெயர் : திருநாவுகரசு

வயது : 61

முகவரி : காவல் ஆய்வாளர், கே–9, திரு.வி.க.நகர் காவல் நிலையம், சென்னை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of July 2026 .

---

**27.07.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி கார்த்திக் என்கிற லூஸ் கார்த்தி ஆஜர்படுத்தப்படவில்லை.

**PW5– முதல் விசாரணை**

நான் கடந்த 2024, ஏப்ரல் மாதம், தாம்பரம் காவல் ஆணையரகத்தில் காவல் உதவி ஆணையாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 19.01.2010 திரு.வி.க.நகர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது திருமதி.லதா என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.42/2010 சட்ட பிரிவுகள் 341, 448, 326, 302 இதசவின் படி ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகும். புகாரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு லதா என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன் மற்றும் அவரது மறு வாக்குமூலத்தையும் பதிவு செய்தேன். அன்றைய தினமே சம்பவ இடமான 359, திரு.வி.க. நகர் குடியிருப்பு, முதல் தளம் என்ற குற்ற சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சாட்சிகள் வெற்றிச்செல்வம் மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வை

மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்தப் பார்வை மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆகும். பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதே இடத்தில் பஞ்சாயத்தார்களை விசாரித்து இறந்த நபர் விஜயகுமார் என்பவரின் இறப்பிற்கான காரணத்தை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். தடய அறிவியல் துறை அலுவலர் திரு.பரதன் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு அவர்கள் கூறிய அறிவுரையின்படி சம்பவ இடத்திலிருந்து அன்றைய தினமே 16.15 மணிக்கு மேற்படி வெற்றிச்செல்வம் மற்றும் சரவணன் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து ரத்தக்கரை படிந்துள்ள கீழ்கண்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அவை தம்பிள்ஸ் ஒன்று, சிவப்பு நிற தொப்பி ஒன்று, தலைமுடி கொத்து, சக்தி மசாலா மிளகாய் பொடி கவர் ஒன்று, கண்ணாடி துண்டுகள் ஒன்பது மட்டும், Papilon என்று அச்சடிக்கப்பட்ட கருப்பு மற்றும் சந்தன கலர் செருப்பு ஒரு ஜோடி, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம் தோய்ந்த பஞ்சு துணி, சம்பவ இடத்தில் வெளிச்சுவற்றிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம் தோய்ந்த Bull worker ஒன்று ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. Bull worker ஒன்று, சா.பொ.6 ஆகும். புலன் விசாரணையின் ஒரு பகுதியாக மோப்ப நாயை சம்பவ இடத்திற்கு வரவழைத்து சம்பவ இடத்திலிருந்து வீனஸ் பஸ் ஸ்டாண்டு வரை சென்று

அந்த நாய் நின்று விட்டது. சம்பவ இடத்திலிருந்து இறந்த நபரின் உடலை பிரேத விசாரணை முடிவடைந்து தலைமை காவலர் சுப்பிரமணியன் என்பவர் மூலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்கிற்க்கு அனுப்பி வைத்தேன். இறந்த நபரின் மகன் சதீஷ் என்பவரையும் வெட்டி விட்டதால் அவரையும் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக காவலர் பூபதி என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். பிறகு இவ்வழக்கில் சாட்சிகள் சதீஷ், வசந்தா, திருமதி.தேவி, குமார், லட்சுமி, தட்சிணாமூர்த்தி, பரதன், குபேந்திரன், ஆபிரகாம், பூபதி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை தேடி வந்த போது 20.01.2010 அன்று வீரமுத்து என்ற நபரிடம் எதிரிகள் கொள்ளை அடித்ததால் அந்த வழக்கில் கைது செய்யப்பட்டு பொதுமக்களே எதிரிகளை பிடித்து வந்து ரோந்து போலீசார் உடன் காவல் நிலையத்தில் ஆஜர்படுத்தினார்கள். எதிரிகள் சங்கர், ஜெகன், கார்த்திக் என்கிற லூசு கார்த்திக், ஸ்ரீதர் என்கிற சின்ன ஸ்ரீதர் ஆகியோரை பொதுமக்கள் என்னிடம் ஆஜர் படுத்தினார்கள். அவர்களை நான் தனித்தனியாக விசாரித்தபோது அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் புஷ்பராஜ், ரகுபதி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர்கள் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களான கத்தி மற்றும் அவர்கள் அணிந்திருந்த ரத்தகரை படிந்த சட்டைகளையும் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஒப்படைப்பதாக என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.8 ஆகும். 1ம் எதிரி சங்கரிடமிருந்து சாம்பல் வெள்ளை நிற கோடு போட்ட ரத்தக்கரை படிந்த முழுக்கை சட்டை

ஒன்று, முக்கால் அடி நீளம் உள்ள கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றதல் மகசர் அ.த.சா.ஆ.9 ஆகும். அந்த ரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை சா.பொ.7, இரும்பு கத்தி சா.பொ.8 ஆகும். எதிரி ஜெகன் என்பவரிடம் இருந்து சுமார் 1 1/4 அடி நீளம் உள்ள கைப்பிடியுடன் கூடிய இரும்பு அருவா கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.10 ஆகும். அருவா கத்தி சா.பொ.9 ஆகும். சுமார் ஒன்றரை அடி நீளம் உள்ள கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் திரு.வி.க.நகர், மீன் மார்க்கெட்டில் இருந்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.11 ஆகும். அந்த இரும்பு கத்தி சா.பொ.10 ஆகும். எதிரி ஸ்ரீதரிடம் இருந்து சுமார் ஒன்றரை அடி நீளம் உள்ள கைப்பிடி கூடிய கத்தி ஒன்றையும், நீலநிற மேக்ஸ் 100 சுசுகி பதிவு எண்.TN 07 V 0952 என்ற இருசக்கர வாகனத்தையும், சிகப்பு நிற பல்சர் மோட்டார் சைக்கிள் பதிவு எண்.TN 07 AE 6377 என்ற இரு சக்கர வாகனத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மலசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.12 ஆகும். 1 அடி நீளம் உள்ள கத்தி சா.பொ.11, சுசுகி பைக், சா.பொ.12, பல்சர் மோட்டார் சைக்கிள் சா.பொ.13. 20.01.2010 தேதி மதியம் 2:30 மணி அளவில் இறந்த நபர் விஜயகுமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக அரசு மருத்துவமனைக்கு மருத்துவர் டாக்டர்.வி.டெக்கல் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அன்றைய தினமே அவர் பிரேத பரிசோதனை செய்தார். பிரேத பரிசோதனைக்கு பின்பு அவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் மருத்துவர் டெக்கல் என்பவரை விசாரித்து அவரது

வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இறந்த நபரின் உடலில் இருந்து அவர் அணிந்திருந்த ஆடைகளை காவலர் சுப்ரமணி என்பவர் மூலம் பிரேத விசாரணைக்கு பின்னர் ரத்தக்கரை படிந்த சிகப்பு நிறம் உள்ள ஷார்ட்ஸ் ஒன்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 அ.த.சா.ஆ.13. ஆகும். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட நான்கு எதிரிகளையும் நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன். இவ்வழக்கில் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை 5, படிவம் 95 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். அந்த படிவம் 95(5) அ.த.சா.ஆ.14 to அ.த.சா.ஆ.18 ஆகும். மற்ற எதிரிகளை தேடி வந்த போது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ராஜா என்பவரை 22.01.2010 அன்று 10.45 மணிக்கு அயனாவரம், பஸ் டிப்போ அருகில் கைது செய்து அவரை விசாரித்த போது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சதீஷ்குமார், பாபு ஆகியோர் முன்னிலையில் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 22.1.2010 அன்று பாலாஜி என்பவரை வழிப்பறி செய்த வழக்கில் எதிரி ஸ்ரீதர் என்கிற ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீதர் என்பவரை கைது செய்து விசாரித்த போது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாபு மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 23.15, பெரம்பூர், கேரேஜ் அருகில் எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்த கிளி பச்சை கலர் கொண்ட பனியன் ஒன்று, ரத்தகரை படிந்த கத்தி ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அ.த.சா.ஆ. 19 ஆகும். அந்த கிளி பச்சை கலர் பனியன் ஒன்று சா.பொ.14, கத்தி சா.பொ. 15 ஆகும்.

ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் சதீஷ்குமார், பாபு, சரவணபாபு ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் டாக்டர் ஹரிஹர கோபாலகிருஷ்ணன் மருத்துவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இறந்து போன நபரின் பிரேத்தை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற காவலர் பூபதி, சுப்ரமணிய ஆகியோரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இறந்து போன நபரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உள்உறுப்புக்களை ரசாயன பகுப்பாய்விற்காக தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைத்தேன். பரிசோதனைக்கு பின்னர் அவர்கள் வழங்கிய அறிக்கையை பெற்றேன். ரத்தம் படிந்த ஆடைகளையும், பகுப்பாய்வு செய்த அறிக்கையும் பெற்றேன். சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களையும் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கைகள் 5, அ.த.சா.ஆ. 20 to அ.த.சா.ஆ 24 ஆகும். தடய அறிவியல் துறை நிபுணர்களான நலீனா மற்றும் நிர்மலா பாய் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இறந்து போன விஜயகுமார் என்பவரின் மனைவி லதா மற்றும் மகன் சதீஷ் ஆகியோர்களை 15 ஆவது நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் படுத்தி அவர்களது பிரிவு 164 குவிமுச வாக்குமூலத்தை தனித்தனியாக பதிவு செய்தேன். அந்த இரண்டு பிரிவு 164 வாக்குமூலங்கள் அ.த.சா.ஆ.25 மற்றும் அ.த.சா.ஆ 26 ஆகும். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது சட்ட பிரிவுகள் 147, 148, 341 448, 326, 120 பி, 302 இதசவின் படி இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் அ.சா.3 தேவி என்பவர் என்னிடம் பிரிவு 161 வாக்குமூலத்தின் படி வாக்குமூலம் அளித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

இவ்வழக்கில் தொடர்புடைய சாட்சிகளை விசாரிப்பதும், வழக்கிற்கு தொடர்புடை விவரங்களை சேகரிப்பதும், விசாரணை அதிகாரியின் கடமை என்று சொன்னால் சரிதான். புலன் விசாரணை செய்யும் போது சாட்சிகளின் வாக்கு மூலங்களில் ஏதேனும் முரன்பாடுகள் இருந்தால் அது குறித்தான கேள்வியை சம்பந்தப்பட்ட சாட்சியிடம் கேட்டு அதனுடைய விவரத்தை பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார்தாரர் வேறு யாருடனாவது காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுக்க வந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. புகார் யாரால், எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. புகார்தாரரை புகார் கொடுத்தவுடன் அவரை காவல் நிலையத்திலேயே நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் சரிதான். புலன் விசாரணை செய்யும்போது வழக்கு தொடர்பாக விசாரணை செய்யும் நடவடிக்கைகளை தேதி மற்றும் நேரத்தை சிடி பைலில் குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். புகார்தாரர் புகார் கொடுக்க வந்த போது புகார்தாரரின் உடலில் ரத்தகறைகள் எதுவும் நான் பார்க்க வில்லை. அ.சா.2 சதீஷ்யை மருத்துவமனைக்கு அனுப்பி விட்டு அதன் பிறகு தான் பிரேத விசாரணை அறிக்கை மேற்கொண்டேன். சம்பவ இடத்திற்கு நான் சென்றவுடன் காயம் பட்டிருந்த அ.சா.2 சதீஷ்யை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி விட்டு அதன் பிறகு மாலை மருத்துவமனைக்கு சென்று சதீஷின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். சதீஷை எத்தனை மணிக்கு விசாரணை செய்தேன் என்று

சிடி பைலில் குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. சதீஷை நான் மதியம் 2.15 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். சம்பவ இடத்திலிருந்து சதீஷை இன்னார் பாதுகாப்பில் விட்டு வந்தேன் என்று புகார்தாரர் புகாரிலும், அவரது வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சம்பவ இடத்தில் பார்த்த போது அவரது கணவரையும், மகனையும் தூக்கி அவரை காப்பாற்ற முயற்சி செய்ததாக குறிப்பிட படவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பார்த்தவுடன் அந்த நேரத்தில் அதனை பார்த்து பதறி கூச்சலிட்டதாகவோ, அக்கம் பக்கத்தில் இருந்து யரேனும் வந்ததாகவோ, புகாரில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எந்த தேதி, நேரத்தில், யார் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்ற குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு உடனடியாக நான் அனுப்பி வைத்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் நீதிபதியிடம் 20.01.2010 அதிகாலை 3.00 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டதாக உள்ளது என்றால் தாமதத்திற்குண்டான காரணத்தை நான் முதல் தகவல் அறிக்கை மற்றும் சம்ர்பித்த ஆவணங்களில் நான் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் கொடுப்பதற்கு முன்னரே போலிசார்க்கு தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்து சம்பவ இடத்தில் காயம் பட்டிருந்த அ.சா.2 சதீஷை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கபட்ட பின்னர் தான் புகார்தாரர் புகரை காவல் நிலையத்தில் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் விஜயகுமார் மீது அயனாவரம் காவல் நிலையத்தில் கஞ்சா குற்ற வழக்குகள் இருந்தது என்றால் சரிதான். இறந்த நபர் விஜயகுமாரின்

அண்ணன் மகன் ஞானம் மீது அயனாவரம் காவல் நிலையத்தில் கொலை வழக்கு மற்றும் பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது இறந்த நபர் விஜயகுமாரின் கைபேசி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. கைபேசி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றாலும், அதனை ஆய்விற்கு உட்படுத்தினால் இறந்த நபர் விஜயகுமார் யாரிடம் கடைசியாக பேசினார் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. சதீஷின் விபத்து பதிவேட்டை மருத்துவமனையில் இருந்து அன்றைய தினம் வாங்கி பார்த்தேன் நேரம் ஞாபகம் இல்லை. சதீஷின் விபத்து பதிவேட்டில் அவரை அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் கத்தியால் தாக்கியதாக குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் சரிதான். சதீஷை தாக்கிய நபர்களில் இரண்டு பேர் ஹெல்மேட் அணிந்து வந்ததாக அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது சொல்லி இருக்கிறார் என்றால் அது போன்று என்னிடம் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. காயம் பட்ட அ.சா.2 சதீஷ் எனது விசாரணையிலும், அவரது தாயாரிடம் கூறும் போது விபத்து பதிவேட்டில் கூறியது போல் இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் ஹெல்மெட் அணிந்து இருந்து தாக்கியதாக என் விசாரணையில் சொல்லி இருக்கிறார் என்றாலும், அந்த உண்மை விவரத்தை மறைத்து வழக்கிற்கு ஏற்றார்போல் என்னுடைய அறிவுரையின் பேரில் புகார் மற்றும் மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பிரேத விசாரணையின் போது பஞ்சாயத்தார் நபர்களை சாட்சியாக நான் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணையின் செய்யும் பொழுது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சாட்சி பட்டியலில் குறிப்பிடபட்டிருக்கும்

நபர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்கொண்ட சாட்சிகளை விசாரிக்காத நிலையில் பிரேத விசாரணை அறிக்கையில் இறுதி முடிவில் இறப்பிற்கான காரணம் என்ன என்று கண்டுபிடிக்க முடியாது என்றால் சரியல்ல. மற்ற எந்த சாட்சிகளிடமிருந்து ரத்தகரை படிந்த அவர்கள் அணிந்திருந்த உடைகள் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் 9 பொருட்களில் நான் தயாரித்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசரில் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலும், என்னிடம் அளித்த வாக்குமூலத்திலோ அவரது மகன் அ.சா.2 சதீஷின் வலது உள்ளங்கையில் கத்தி காயம் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை. அ.சா.2 என்னுடைய விசாரணையில் என்னை வெட்டிய சங்கர் அவரது தம்பி கதிரை வெட்டினீர்களா என்று கத்தினாரா என்று கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அ.சா.2 மேலும் என் விசாரணையின் போது அவரது தந்தை விஜயகுமார் அவரை பிடித்து இழுத்தார் என்றும், என் பிள்ளையை விட்டு விடுங்கடா என்று கத்தினாரா என்றால் இல்லை. அ.சா.2, அன்றைய தினம் மாலை மருத்துவமனைக்கு சென்று நான் விசாரித்ததாக பொய்யான கூறுகிறேன் என்றால் சரியல ்ல. அப்போது அவர் மயக்க நிலையில் இருந்தார் என்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது கூறியிருக்கிறார் என்றால் சரியல ்ல. நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் அவர்களிடமிருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றப்படவில்லை என்றாலும், அவர்கள் எந்த வித வாக்குமூலத்தையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2வது எதிரி ஸ்ரீதரை 22.01.2010 அன்று காலை அவரது வீட்டிலிருந்து

வழக்கு விசாரணைக்காக என்று காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இந்த வழக்கு மற்றும் வேறொரு வழக்கிலும் அவரை தவறாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல 2ம் எதிரி மீது குண்டர் தடுப்பு சட்டத்தில் வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரிதான். அதில் மற்றொரு வழக்கை அடிப்படை வழக்காவும் இந்த வழக்கை அட்வார்ஸ் வழக்காகவும் காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். உங்களது கூற்றின்படி 2ம் எதிரி மீது வேறு வழக்குகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் பொதுவாகவே சந்தையில் சாதாரணமாக கிடைக்கக்கூடியவை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன விஜயகுமாருக்கு சட்ட விரோத தொழில் ரீதியாக விரோதிகள் பலர் இருந்துள்ளார்கள் என்றாலும், அவருடைய இறப்பிற்கும், இந்த எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் தவறான குற்றப்பத்திரிக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்து எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

//SD//

27.07.2026 IV Addl. Sessions Judge.
IV Additional Court.